ஆண்டவர் வரும் போது அவர் என்னை இந்நிலையில் காண வேண்டுமென நான் விரும்புகிறேன்? நிச்சயமாக, மீட்பு நாளை எதிர்பார்த்து விழிப்பு நிலையில்தான். ஆனால் ஆண்டவர் நாளை எதிர்நோக்கி தயாராக இருப்பதற்கு இன்று நான் என்ன செய்ய வேண்டும்? திருவருகை காலமே, தயார்ப்புகளில் ஒன்று. கிறிஸ்மஸ் திருவிழாவிற்கான ஏற்பாடுகளாக இந்த தயாரிப்புகள் இருக்கின்றன. வாழ்த்து கார்டு எழுதுவது, பரிசுகள் வாங்குவது, அலங்காரம் செய்வது...டிசம்பர் மாதம் மிகவும் பரபரப்பான மாதம்தான். திருவருகை கால மலர்வளையத்தில் முதல் கத்திருப்பு மெழுகுதிரி ஏத்துவதற்கு முன்னேரே, பேரங்காடிகளில் மேற்கொள்ளப்படும் அலங்காரங்களும் கிறிஸ்மஸ் பாடல்களும், இவ்விழா காலத்தின் உண்மை அர்த்தத்தை மறைத்து விடுகின்றன.

இக்காலம் மனமாற்றத்திற்கு, பாலைவனத்தில் ஒலித்தக் குரல் மனம் மாற அழைப்பு விடுக்கிறது, “ஆண்டவருக்கான வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவருக்காக பாதையைச் செம்மையாக்குங்கள்“ (மாற்கு 1:3). ஆண்டவரை வரவேற்க உங்கள் உள்ளத்தை ஆயத்தமாக்குங்கள். சாத்தானையும் அவன் லீலைகளையும் விட்டுவிட்டு, பாவத்திலிருந்தும் சாவுவிலிருந்தும் விலகி, மீட்பின் ஆடையான வெண்ணிற ஆடையை அணிந்து கொண்ட உங்கள் ஞானஸ்நானத்தை நினைவுகூருங்கள். அந்த ஆடையை மீண்டும் எடுங்கள், முதன் முறையாக அணிந்த போது இருந்த வெண்ணிறம் இருப்பதை உறுதிச் செய்துக் கொள்ளும்காலமே, திருவருகை காலம். ஆண்டவரைச் சந்திக்கத் தடைகளாக இருப்பவற்றை அகற்றி விடுவதே, பாதையைச் செம்மையாக்குங்கள் என்பதன் பொருள். பயமிருந்தால், நமது பாவச் சுமைகளிலிருந்து விடுதலை பெற்று, நமக்கு பாவத்திலிருந்து விடுதலை அளித்தவரை அரவணைக்கத் தயாராகயிருக்கும் போதுதான், நம்பிக்கையில் அவரை நேருக்கு நேர் நீங்கள் காண்பீர்கள். இந்த காரணத்திற்காகவே, கிறிஸ்துவின் முள்முடியையும், கசையடியையும், ஏளனப்பேச்சுகளையும், ‘சிலுவையில் அறையும்’ என்ற மக்களின் கூக்குரலையும் நினைவுறுத்தும் ஊதா வண்ணத்துடன் புதிய திருவழிபாட்டு ஆண்டை தொடங்குகிறோம். சிலுவை சாவை ஏற்கும் அளவுக்கு கிறிஸ்து கீழ்படிந்தார் என்பதை நினைவுறுத்துகிறது. அவர் காட்டிய அந்த பேரன்பை ஏற்க மறுக்கும் நம்மையும் தலை வணங்க செய்கிறது.

திருச்சபை ஆண்டின் தொடக்கத்தில், வார்த்தை ஏன் மனுவுருவானது என்பதையும் அதனால் நாம் ஒவ்வொருவரும் வாழ்வில் மனமாற்றத்தை அடைய முடியும் என்பதையும் ஞாபகப்படுத்தப்படுகிறது. ஆண்டவரிடம் திரும்பிவந்து, அவரது இரக்கத்தையும் மீட்பையும் காண, மனந்திரும்புங்கள் என இன்றைய திருப்பாடல் குறிப்பிடுகிறது. அவரது மகனின் மரணத்தில் மனிதனின் பாவத்தை ஏற்றுக் கொண்ட தந்தையின் முன் நீதி அணிவகுத்துச் செல்லும், அவரது காலடியில் சமாதானம் வழிந்தோடும். “உன்னதங்களிலேயே கடவுளுக்கு மகிமை உண்டாகும், பூலகில் நன்மனத்தோர்க்கு அமைதி உண்டாகுக” என அவரது பிறந்த நாள் பாடலை வானுக்கும் பூமிக்கும் இடையில் வானத்தூதர்கள் பாடுவார்கள்.

கிறிஸ்துவில் வழங்கப்பட்ட சமாதானத்தில் நாம் வாழ்ந்தால், கடவுளின் மாட்சிமை நமது வாழ்வில் வெளிப்படும். மனிதனுக்கும் கடவுளுக்கும் இடையிலான இடைவெளியை கிறிஸ்துவின் சமாதானம் போக்குகிறது. வார்த்தை மனுவுருவானது, மரணம், சாவிலிருந்து உயிர்ப்பு, தந்தையின் வலப்பக்கத்திற்கு எழுந்தேறியது ஆகியவை நமது பேர்க்கால பணியை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்திருக்கிறது. நமது பாவத்தைப் போக்கியுள்ளது.ஆகவே இந்த திருவருகை காலத்தில், அவரது வருகைக்கு மாட்சியுடன் காத்திருக்கிறோம். மாசுமறுவற்றவர்களாய், நல்லுறவு கொண்டவர்களாய் சமாதானத்தில் வாழ்ந்திருப்பவர்களாய் நம்மை அவர் காண்பாராக! (2பேதுரு 3:14).

“அன்பார்ந்தவர்களே, இப்போது நாம் கடவுளின் பிள்ளைகளாய் இருக்கிறோம். இனி எத்தன்மையராய் இருப்போம் என்பது இன்னும் வெளிப்படவில்லை. ஆனால் அவர் தோன்றும் போது நாமும் அவரைப் போல் இருப்போம். ஏனெனில் அவர் இருப்பது போல் அவரைக் காண்போம். அவரை எதிர்நோக்கி இருக்கிற அனைவரும் அவர் தூயவராய் இருப்பதுபோல் தம்மையே தூயவராக்க வேண்டும்”. ✢

INTERNAL CIRCULATION ONLY

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

NEWBEC

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

10 டிசம்பர் 2017

திருவருகை காலம்
2ம் ஞாயிறு



# நம்பிக்கையில் தயாராக இருப்பது



## மினவுதல் மாதா தேவாலயம்

85A, ஜலான் யாம் துவான், 70000 சிரம்பான்
தொ.பே : 06-762 4468 / 763 4934 / 767 7542
தொ.நகல் : 06-767 7544
Email: : serembanvisitation@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. அன்ட்ரூ கூய்

*2017 ஆம் ஆண்டின் கருப்பொருள்:*
**எதிர்நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்**
*2017 டிசம்பர் (மார்கழி) மாதத்தின் கருப்பொருள்:*
**கிறிஸ்துவே நமது எதிர்நோக்கு**
**மினவுதல் தேவாலயத்தின் 170ஆம் ஆண்டை நோக்கிய பயணம்**
**( 1848 – 2018 )**

**பங்கு அலுவலக நேரம்:**
**திங்கள் - வெள்ளி:** காலை 8.30 - மாலை 5.30
**சனி :** காலை 8.30 - மாலை 7.30
**ஞாயிறு :** காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்:** திருவருகைக் காலம் - இரண்டாம் ஞாயிறு : (ஆண்டு இரண்டு) சனி 09-12-2017 ஞாயிறு 17-12-2017
எசா 40: 1-5, 9-11 தி.பா 84: 9ab, 10, 11-12, 13-14 2 பேதுரு 3: 8-14 மாற்கு 1: 1-8
**ஆண்டவரே, உமது பேரன்பைக் காட்டி எங்களை மீட்டருளும் ( தி.பா 84 )**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 09 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (பு. சோபியா) | |
| ஞாயிறு | 10 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br><br>1.00 ம | திருப்பலி (தமிழ்) (பு. ஜேம்ஸ்)<br>திருப்பலி (ஆங்கிலம்) (பு. லியோ)<br>திருப்பலி (சீனமொழி)<br>மாலை 4.30 தித்தி (சீ)<br>திருப்பலி (தே.மொ) | **மறைக்கல்வி வகுப்புகள் நடைபெறாது, மிண்டும் அடுத்தவருடம் 2018 ஜனவரி 7ஆம் திகதி பதிவுகள் நடைபெறும்**<br><br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு ( முகிபுவ )**<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |
| திங்கள் | 11 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 12 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 13 | 6.45 கா | திருப்பலி | |
| வியா | 14 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (த) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| வெள் | 15 | 6.45 கா | திருப்பலி | |

**திருவருகைக் காலம் - மூன்றாம் ஞாயிறு : ( ஆண்டு இரண்டு)**
எசா 61: 1-2a, 10-11 லூக்கா 1:46-48, 49-50, 53-54 1 தெச 5: 16-24 யோவான் 1: 6-8, 19-28
**என் கடவுளில் என் உள்ளம் பூரிப்படையும (லூக்கா 1:46-50, 53-54)**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 16 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (பு. டெனிஸ்) | |
| ஞாயிறு | 17 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>1.00 ம | திருப்பலி (தமிழ்) (பு. டைட்டஸ், ஏஞ்சலா)<br>திருப்பலி (ஆங்கிலம்) (பு. அலோசியஸ்)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தே.மொ) | **மறைக்கல்வி வகுப்புகள் நடைபெறாது, மிண்டும் அடுத்தவருடம் 2018 ஜனவரி 7ஆம் திகதி பதிவுகள் நடைபெறும்**<br><br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு ( முகிபுவ )**<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

**2017 டிசம்பர் (மார்கழி) மாத செய்திகள் / நிகழ்வுகள்**

1. **ஆலய காணிக்கை**
   i. 2/3 நவம்பர் ரிம: 9,770.00
   ii. சமூக அக்கறைப் பணிக்குழு : ரி.ம : 6,811.00
   இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!
2. **திருவழிபாட்டுப் பொருட்கள் விற்பனைக்கு:**
   I. திருவழிபாட்டு நாட்காட்டி 2018 (ஆ) : ரி.ம 6.00
   II. திருவழிபாட்டு நாட்காட்டி 2018 (த) : ரி.ம 5.00
   III. அன்றாட சிந்தனை 2018 (ஆங்கிலம் தமிழ் : ரி.ம 20.00
3. **மறைந்த முதன்மைக்குரு (மோன்சின்யூர்) அந்தோணி தோமஸ்**
   அவர்களுடைய நினைவுப் புத்தகம் விற்பனையில் உள்ளது. விலை. ரிம: 5.00

**திருமண அருளடையாளக் கொண்டாட்டம்:**
**யூகேந்திரன் நாயர் & கிறிஸ்டினா ஷெரீன் சேவியர்** 16/12 **பகல்** 3.30

**மரித்த ஆன்மாக்களுக்காக செபிப்போம்**
**அ) மேரி ஆன் ஸ்டீபன் (இறப்பு** 02/12/17)
**ஆ)சூசன் சாரா டிசில்வா த/பெ ஜோன் பிரான்சிஸ் (இறப்பு**:3/12/17)
**முடிவில்லா ஒளி இவர்கள் மேல் ஒளிர்வதாக!**

➢ **2017 ஆம் ஆண்டின் திருவருகைக் காலத்தில் ஒப்புரவாகுவோம்**
11 **டிசம்(திங்கள்) மாலை** 7.30 **புனித இக்னேசியஸ் ,பெஜெ**
12 **டிசம்(செவ்) மாலை** 7.00 **புனித திரேசா, நீலாய்**
13 **டிசம்( புதன்) இரவு** 8.00 **புனித இரட்சகர் ஆலயம், கிள்ளான்**
14 **டிசம்( வியா) மாலை** 7.00 **புனித அலோசியஸ், மந்தின்**
**இரவு** 8.00 **புனித யோசேப்பு .செந்தூல்**

**மினவுதல் தேவாலயத்தில் ஒப்புரவு அருளடையாளம் :**
**22-12-2017 (வெள்ளி)**
மாலை 6.00 திருப்புகழ் மாலை தொடர்ந்து திருப்பலி.
ஒப்புரவு அருளடையாளம்

➢ **கிறிஸ்மஸ் மகிழ்ச்சிப் பாடல்கள்**
**கிறிஸ்மஸ் பாடல்கள் பாடி கிறிஸ்து பிறந்த மகிழ்ச்சியை எடுத்து சொல்வது நம் திருச்சபையின் பாரம்பரியமான நிகழ்ச்சி. ஒவ்வொரு அதிச./சோன் உறுப்பினர்கள் இதை செயல்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம். தனிமையில் இருப்போர், வயதானோர், நோயாளிகள் உள்ள இல்லங்களுக்கும், குடியேற்ற வாசிகளின் இல்லங்கள், மருத்துவமனையில் உள்ள குழந்தைகள் வார்டுகள், முதியோர் இல்லம், காவல் நிலையத்திற்கு அருகே, அங்காடிகள் இதுபோன்ற இடங்களுக்குக் சென்று பாடல் பாடுங்கள்.**

➢ "கிறிஸ்மஸ் கரோலிங் 2017" காவல்துறை அனுமதிப் பத்திரம் **(Police Permit for "Christmas Carolling 2017")** : ஆலய அலுவலகத்தில் உள்ளது. சோன் மற்றும் அதிச பொறுப்பாளர்கள் வந்து பெற்றுக்கொள்ளலாம்

➢ **2017 கிறிஸ்மஸ் மற்றும் 2018 புத்தாண்டு திருப்பலி அட்டவனண**

a ) **கிறிஸ்மஸ் நள்ளிரவு 24 டிசம்பர் (ஞாயிறு)**
மாலை 5.00 மணி (ஆ) இரவு 7.00 (த) இரவு 9.00 (சீனம்) இரவு 11.00 (ஆ) மாலை 4.30 (தித்தி)

b) **கிறிஸ்மஸ்நாள் (25 டிசம்பர்) திங்கட்கிழமை**
காலை 7.00 (த) காலை 9.00 (ஆ) காலை 11.00 (சீ) பகல் 1.00 (தேமோ)

c ) **புத்தாண்டுநள்ளிரவுதிருப்பலி (டிசம்பர் 31) ஞாயிறு**
இரவு 8.00 நான்கு மொழி திருப்பலி - நள்ளிரவு வரை அமைதியில் செபித்தல்

d) **புத்தாண்டுதிருப்பலி (ஜனவரி 1 - திங்கட்கிழமை)**
காலை 7.00 (த) காலை 9.00 (ஆ) காலை 11.00 (சீ) பகல் 1.00 (தேமோ)

e) **டிசம்பர்26-29 வரை தினமும் மாலை 7.00 மணிக்கு திருப்பலி நடைபெறும்**

➢ **கிறிஸ்துவே நமது நம்பிக்கை- பங்கு மனித வள மேம்பாட்டில் குழந்தைகளுக்கான கிறிஸ்மஸ் விருந்து** (வயது 4-17) ஞாயிறு 17-12-2017 பகல் 2.30 மணி. இந்த ஆண்டு பிற சமயத்தைச் சேர்ந்த மற்றும் ஷெல்டர் ஹோம் குழந்தைகள் இதில் பங்கேற்கின்றார்கள். கிறிஸ்மஸ் விழாவின் உண்மையான அர்த்தத்தை இவர்களோடுப் பகிர்ந்து கொண்டாடுவோம். கொடுக்கும்போது தான் நாம் பெற்றுக்கொள்கிறோம். கிறிஸ்மஸ் வாழ்த்து மரத்திலிருந்து ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட காகிதத்தை எடுத்து அதில் குறிப்பிட்டுள்ள தகுதியான பரிசுப்பொருட்களை வாங்கி, மரத்தின் அருகே வைக்கப்பட்டிருக்கும் பரிசு பெட்டியில் வைக்கவும் . இறுதி நாள்;10-12-2017

➢ **உலகை ஆரஞ்சு வண்ணமாக்குவோம்.** குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைக்கு எதிராக குரல் கொடுப்போம். 16 நாட்கள் செபம்/தியானம் - நாட்டுக்காக (25 நவம்பர் -10 நவம்பர் ) கூடுதல் விவரங்களுக்கு பங்கு அகப்பக்கத்தை நாடுங்கள்.

➢ **2017 ஆம் ஆண்டின் பீடச்சிறுவர்களின் ஆண்டு முகாம்:**
கருப்பொருள்: " கிறிஸ்துவில் சகோதரத்துவம்"
நாள்: டிசம்பர் 11-13 (திங்கள் - புதன்)
இடம்: விசிடேசன் செண்டர், ஜலான் லீ சாம் - அனைத்து பீடச்சிறுவர்களும் இதில் கட்டாயம் கலந்துகொள்ள அழைக்கப்படுகின்றார்கள். இதற்கான ஒப்புதல் கடிதம் விரைவில் பெற்றோர்களுக்கு வழங்கப்படும்.

➢ **பங்கின் பராமரிப்புக்கு நிதியுதவி எதிர்பார்க்கிறோம்:** பங்கு அளவில் செய்யப்படும் அனைத்து பராமரிப்பு செலவுகளுக்கும் உங்கள் நிதியுதவிகளை எதிர்பார்க்கிறோம். உங்கள் நன்கொடைகளை பணமாகவோ காசோலையாகவோ செலுத்தலாம். காசோலைகளை Church of Visitation என்று எழுதி ஆலய அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்
**குறிப்பு:** நன்கொடை வழங்குவோர் நீங்கள் வழங்கும் தொகைக்கு வரி விலக்குப் பெற பங்கு அலுவலகத்தை நாடவும்.

➢ **ஏழைக் குடும்பங்களுக்கு உதவி செய்ய உணவுப் பொருட்கள் தேவை. (**அரிசி**,** சீனி, கோதுமை மாவு மற்றும் சமையல் எண்ணெய்) இவைகளை பங்கு அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

➢ **ஆலய வளாகம் மற்றும் அறைகள் முன்பதிவு:** கூட்டங்கள், நிகழ்வுகள் ஆகியவற்றுக்கு முன்கூட்டியே அறைகளை பங்கு அலுவலகத்தில் பதிந்துகொள்ளுங்கள். கடைசி நேர பதிவு அனுமதிக்கப்படாது.

➢ **தமிழ் மறைக்கல்வி** வகுப்புகளில் பயிற்றுவிக்க மறைக்கல்வி ஆசிரியர்கள் தேவைப்படுகின்றார்கள். ஆர்வமுள்ளவர்கள் சூசை செல்வநாதன் அவர்களை தெடர்பு கொள்ளவும். 012 903 6581

➢ **" திருவிவிலியமும் தமிழர் பண்பாடும் "** : எனும் தலைப்பில் திருச்சி தனிநாயகம் அடிகள் தமிழியல் நிறுவனத்தின் இயக்குநர் மறைதிரு அமுதன் அடிகளார் உரை நிகழ்த்தவுள்ளார். அனைவரும் இதில் கலந்துகொள்ள அழைக்கப்படுகின்றீர்கள். 11-12-2017 (திங்கள்) மாலை 7.00 - 9.00 மணி வரை, விவிலிய அறை, தொடர்புக்கு : ரீத்தா சேவியர்: 012 918 1620

**லவ் & லைஃப் தியானம்** (ஆ/தேமோ/த/சீ) 18-24 வயது வரை உள்ள கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தில் உள்ள இளைஞர்கள் இதில் கலந்துகொள்ள அழைக்கப்படுகிறார்கள். நாள் ஜனவரி 16-20 ,2018 (செவ் - சனி) தொடர்புக்கு: 03-2070 6101 அல்லது மின்னஞ்சல் jacinta@asayokl.org